## அவதூறுகளுக்குப் பதிலடி!

பெரியார் உயிரோடு களமாடிய காலத்திலிருந்து பார்ப்பனர்களும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் திராவிடர் கருத்தியலைச் சிதைக்க, தொடர்ந்து பல அவதூறுகளைப் பரப்பி வந்ததை அறிவோம்.

இப்போது ஆர்.எஸ்.எஸ். புதிய அடியாட்கள் அவதூறுகளைப் பரப்பும் பணியைக் கையில் எடுத்துள்ளனர். அவதூறுகளுக்கு ஏற்கனவே பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், அந்த அவதூறுகளைக் கேள்விப்படும் இந்தத் தலைமுறை இளைஞர்கள் முற்றிலும் புதியவர்கள்.

எனவே, பதிலடிகளை அடுத்தடுத்த தலைமுறைக்கும் பரப்பவேண்டிய கடமையில் காட்டாறு பதிப்பகம் ஈடுபட்டுள்ளது.

குறிப்பாக ஆர்.எஸ்.எஸ்.சின் அடியாட்களும், அவரை ஏவியவர்களும் எழுப்பும் கேள்விகளைப் பட்டியலிட்டுள்ள காட்டாறு பதிப்பகத்தின் அதிஅசுரன், அதுபோல மேலும் கேள்விகள் இருந்தால் அவற்றை அவரது பதிவில் பின்னூட்டமிடவும் கேட்டுக் கொண்டுள்ளார். அந்தக் கேள்விகளுக்கான பதில்களையும் யார் வேண்டுமானாலும் அனுப்பலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி - பதில் A4 பக்க அளவில் ஒரு பக்கத்தில் இருக்க வேண்டும் என்றும், பிப்ரவரி ஒன்றாம் தேதி வரை திரட்டப்படும் கேள்வி பதில்களைத் தொகுத்து நூலாக வெளியிடவும் திட்டமிட்டுள்ளார்..

கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி kaattaaru2014 @gmail.com.

ஒவ்வொரு பதிலையும், எல்லோரும் வீடியோக்களாகவும் வெளியிடுங்கள் என்று கோரிக்கை விடுத்துள்ள அவர், வீடியோ தயாரிப்பதற்காகவே கேள்விகளை நூலாகக் கொண்டு வர உள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். நூல் தேவைக்கு: 99421-19077 என்ற எண்ணில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

## ஃப்ளாஷ்பேக்





### உண்மைத் தொண்டரின் உழைப்புக்கு மரியாதை!



மதன் குமார்

2006-ஆம் ஆண்டு புரசைவாக்கம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அலுவலகத்தைத் திறந்து வைக்க அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் வருகை தந்திருந்தார். அப்போது, புரசைப் பகுதியில் கழகச் செயல்வீரர் என பெயர் எடுத்த என் தந்தை புரசை பு.குமரேசன் அவர்கள் தளபதியை வரவேற்று பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தார். எனது தந்தை மறைவெய்திய பிறகு, அவரது படத்திறப்புக்கு தளபதி அவர்கள் வருகை தந்து, உண்மை தொண்டரின் உழைப்புக்கு மரியாதை செய்ததை என்றைக்கும் என்னால் மறக்க முடியாது. தந்தையின் வழியில் கழகமே குடும்பம் என நானும் பணியாற்றி வருகிறேன்.

– மதன் குமார்
கொளத்தூர் கிழக்குப் பகுதி
சென்னை கிழக்கு மாவட்டம்

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### மறைமலையடிகள் நூற்றாண்டு!

1976-ஆம் ஆண்டில், வாழ்நாள் முழுவதும் தமிழுக்காக தொண்டாற்றிய மறைமலை அடிகள் நூற்றாண்டினைச் சிறப்பாகக் கொண்டாட, ஏற்பாடு செய்தார் கலைஞர். ஆனால், 'மிசா ஆட்சிக் கலைப்பு' காரணமாக விழா சிறப்பாக நடத்த முடியவில்லை என்றாலும், எளிய முறையில் மண்டபத்தில் கொண்டாட 'சென்னை தமிழ் இலக்கியக் கழகம்' சார்பில், அனுமதி வாங்கப்பட்டது. சென்னை மத்திய நூலகத்தில் நிகழ்ச்சி தொடங்கும் நேரத்துக்கு முன்பாக, காவலர்கள் அந்த அரங்கினைப் பூட்டி விட்டு சென்றுவிட்டனர். பின்னர், நீண்ட போராட்டத்துக்குப் பின் நிபந்தனைகளுடன் மறைமலையடிகள் நூற்றாண்டு விழா நடைபெற்றது.

# மாநாடு

ர.பிரகாசு **48**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# பாடம் கற்பிப்போம்!




ஓவியம் : சிகரன்

'திராவிடம் என்றால் தெலுங்கு, மலையாளம், கன்னடமும் தானே! பிறகு ஏன் தமிழர்களிடத்தில் மட்டும் திராவிடம் பேசுகிறீர்கள்?' என்ற விமர்சனம் இப்போது எழுவதல்ல. தி.மு.கழகம் தொடங்கப்பட்ட காலத்திலேயே எழுந்ததுதான். அப்படியொரு காலகட்டத்தில்தான் கர்நாடக மாநிலத்தில் தி.மு.க.-வின் இரண்டாவது மாநாடு 1958-ஆம் ஆண்டு ஏப்ரல் 26, 27-ஆம் தேதிகளில் பெங்களூரு சுபாஷ் நகரில் நடைபெற்றது. கன்னட மக்கள் அதற்கு முன் கண்டிராத மாபெரும் மாநாடு இது.

கோலார் தங்க வயலில் வாழ்நாளெல்லாம் கழகப் பணியாற்றிய தோழர் சின்னராசன் பெயர் மாநாட்டுப் பந்தலுக்கும், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் பெயர் மாநாட்டு அரங்கிற்கும் சூட்டப்பட்டது. "திராவிட நாடு திராவிடருக்கே, அண்ணா வாழ்க!" என்ற முழக்கங்களுக்கு மத்தியில் மாநாட்டுத் தலைவர் அன்னை சத்தியவாணி முத்து கழகக் கொடியை ஏற்றினார். நடிகமணி நாராயணசாமி மாநாட்டைத் தொடங்கிவைக்க, ஜி.எஸ்.முனுசாமியப்பா குழுவினர் இன்னிசை நிகழ்த்தினர். வரவேற்புரையாற்றிய எஸ்.வி.பதி கர்நாடக மாநிலத்தில் முதல் மாநாட்டுக்கும் இரண்டாவது மாநாட்டுக்கும் இடைப்பட்ட காலத்திலான கழக வளர்ச்சியை எடுத்துரைத்தார்.

பிற்பகலில் 'திருக்குறள் கூறும் திராவிடம்:, என்ற தலைப்பில் மீ.சு.இளமுருகு, 'நாமும் பொதுவுடைமையும்' என்ற தலைப்பில் ஏ.வி.பி.ஆசைத்தம்பி, மொழிப்பிரச்சினையின் வரலாற்றை ஆராய்ந்து பேராசிரியர் க.அன்பழகன் உள்ளிட்ட பலர் உரையாற்றினர். கழக இலட்சியம் பற்றி நாவலர் ஆற்றிய உரையோடு முதல்நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன. இரண்டாவது நாளில் 'சட்டசபையில் நமது பணி' என்ற தலைப்பில் ஏ.கோவிந்தசாமி, 'இன்பத் திராவிடம்' என்ற தலைப்பிலே என்.வி.நடராசன், 'தி.மு.கழகமும் மற்ற அரசியல் கட்சிகளும்' என்ற தலைப்பிலே 'நம்நாடு' பொறுப்பாசிரியர் காஞ்சி கல்யாண சுந்தரம் உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

'கழகமும் மகளிர் கடமையும்' என்ற தலைப்பிலே உரையாற்றிய மாணவி சற்குணம், கழகத்தில் பெண்கள் அணி நாளும் வளர வேண்டும் என்று வலியுறுத்தினார். 'கலைஞனும் அரசியலும்' என்ற தலைப்பில் லட்சிய நடிகர் எஸ்.எஸ்.இராசேந்திரன் முக்கியக் கருத்துக்களை முன்வைத்தார். இறுதியாகப் பேருரையாற்றிய பேரறிஞர் அண்ணா, "பல மொழிகளைப் பேசுகிற ஐரோப்பா ஒரு நாடாகி விட முடியுமா? அதுபோல பல மொழிகளைப் பேசுகிற இந்தியத் துணைக்கண்டம் ஒருநாடாகி விட முடியாது" என்று திராவிட நாட்டு உணர்ச்சியை முன்வைத்து முழங்கினார்.

> **"பல மொழிகளைப் பேசுகிற ஐரோப்பா ஒரு நாடாகி விட முடியுமா? அதுபோல பல மொழிகளைப் பேசுகிற இந்தியத் துணைக்கண்டம் ஒருநாடாகி விட முடியாது!"**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அமிர்தசரஸ் கூட்டத்தில் தி.மு.க.-வை விமர்சித்ததற்குப் பதிலடி, இந்தித் திணிப்புக்கு கண்டனம், நியூ மைசூர் என்ற பெயரை கர்நாடகம் என மாற்ற வேண்டும், திராவிட நிலப்பரப்பில் தனி உச்சநீதிமன்றம் வேண்டும், ரயில்வே-ஒன்றிய அரசுப் பணிகளில் வடவர் ஆதிக்கத்தை தடுக்க வேண்டும் என்பது உட்பட 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைமை உரையாற்றிய அன்னை சத்தியவாணிமுத்து. "நாம் தொடங்கியிருக்கும் பெரும் பயணத்தின் லட்சியப் பணியை புரிந்துகொள்ளாமலேயே நல்லதற்கோ-கெட்டதற்கோ, நாட்டின் பெரிய மனிதர்கள் என்ற போர்வையில் திரிந்துகொண்டிருக்கும் சிலர், பல தவறான பிரச்சாரத்தை- மனதறிந்து பொய்யை நிலைநாட்டும் வகையில், பேசி வருகிறார்கள். நாம் இவர்களுக்குத் தரும் விளக்கம், இங்கு குழுமியிருக்கும் மக்களுக்கு மிகப் பழையதாக இருக்கலாம். ஆனால் அந்த அரசியல் அனுபவ முத்திரை பெற்ற பெரிய மனிதர்களுக்கோ நாம் கற்றுத்தரும் பாடமாக இருக்கிறது" என்றார்.

இப்போதும் கற்கிறார்கள் என்பது கழகத்திற்கு பெருமிதம்; அவர்களுக்கோ பரிதாபம்!

**...கூட்டம் திரளும்**

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் **48**

**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# மனித நாகரிகத்துக்கு தமிழர் தந்த தொழில்நுட்பம்!




தொழில்நுட்ப அடிப்படையில், மனித பரிணாமத்தைப் புரிந்து கொள்ள, ஆதி மனிதர்கள் பயன்படுத்திய கருவிகளின் அடிப்படையில் காலம் மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. அவை கற்காலம், தாமிரகாலம், இரும்புக் காலம் என கணக்கிடப்படுகிறது.

மனிதர்கள் கல்லைக் கருவியாகப் பயன்படுத்திய காலம் கற்காலம் என்றும், தாமிர/செப்பு/வெண்கல கருவிகளைப் பயன்படுத்திய காலம் தாமிரக்காலம் என்றும் இரும்பு / எஃகு கருவிகளைப் பயன்படுத்திய காலம் இரும்புக் காலம் என்றும் வகைப்படுத்தப்படுகிறது.

தாமிரத்தை உருக்குவதை விடவும் இரும்பை உருக்க கூடுதல் வெப்பம் அவசியமென்பதால் தொழில்நுட்ப அடிப்படையில் தாமிரக் காலத்தைத் தொடர்ந்தே இரும்புக்காலம் தோன்றியிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. இரும்பு அளவுக்குத் தாமிரம் உறுதியான உலோகம் இல்லை. இரும்பு உறுதியானது அதைக் கருவியாக்கத் தேவைப்பட்ட தொழிற்நுட்பமும் நவீனமானது.

மேற்குறிப்பிட்ட காலவரிசை அறுதியானதல்ல என்பதைத்தான் சமகால தொல்லியல் மற்றும் உலோகவியல் ஆய்வுகள் நிறுவுகின்றன. வட இந்தியாவில் கிடைத்ததைப் போல தமிழ்நாட்டில் அதிக அளவு செம்பு கிடைக்காத காரணத்தால் இங்குச் செம்புக் காலம் வழக்கத்திலிருக்கவில்லை. ஆனால் இரும்பு பரவலாகக் கிடைத்திருக்கிறது, இதன் மூலம் செம்பு பயன்பாடு இங்குத் தொடங்கும் முன்பே இரும்பின் பயன்பாடு தொடங்கி இருக்கக் கூடும் என்கின்றனர், தொல்லியல் அறிஞர்கள். இதன் மூலம் வட இந்தியாவின் செப்புக்காலமும் தென்னிந்தியாவின் இரும்புக் காலமும் சமகாலத்தவை எனலாம்.

ஆதிச்சநல்லூர், சிவகளை, மயிலாடும்பாறை, மாங்காடு, தெலுங்கனூர், கீழ்நமண்டி போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அண்மைக்கால ஆய்வு முடிவுகள் தமிழ்நாட்டில் இரும்பு 5,300 ஆண்டுகளுக்கு முன் அறிமுகமாகியிருக்க வேண்டும் என்று நிறுவுகின்றன. அண்மையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட 'இரும்பின் தொன்மை' ஆய்வு நூல் இந்த கூற்றை மிக விரிவாக விளக்குகிறது. அறிஞர்கள் கா.ராஜன், இரா.சிவானந்தம் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டு எழுதிய இந்நூலை தொல்லியல் துறை வெளியிட்டுள்ளது.

அகழாய்வு செய்யப்பட்ட பகுதிகளின் ஒளிப்படங்கள், கதிரியக்கக் காலக்கணக்கீடுகள், இரும்புக்கால தளங்களின் வரைபடங்கள், உலோகவியலாளர்கள் மற்றும் தொல்லியல் நிபுணர்களின் கருத்துகள், பின்னிணைப்பாக விரிவான நூற்பட்டியல் என நீள்கிறது இந்த நூல்.

ஒற்றை மையப்புள்ளியிலிருந்துதான் இரும்பின் பயன்பாடு தோன்றி பரவலானது என்ற கூற்றை இந்த ஆய்வு கேள்விக்குட்படுத்துகிறது, தொழில்நுட்பம் பல மையப்புள்ளிகளில் தோன்றின என்பதைத் தரவுகளுடன் வலியுறுத்துகிறது. இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் கி.மு. நான்காயிரத்தின் முற்பகுதியில் இரும்பு அறிமுகமாகிவிட்டது என்பது இந்த ஆய்வின் மூலம் உறுதியாகிறது.

மனித நாகரிகத்தின் முக்கிய தொழில்நுட்பமாகக் கருதப்படும் இரும்பு , தமிழ் நிலத்தில் தான் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதற்கான ஆதாரங்களை இந்நூல் வழங்கியிருக்கிறது. எதிர்காலத்தில் நடைபெறும் அகழாய்வுகள் இந்தக் கண்டுபிடிப்புக்கு மேலும் வேலுசேர்த்து திராவிட-தமிழ் நாகரிகத்தின் தொன்மையை உலகிற்குப் பறைசாற்றும் என்ற நம்பிக்கையையும் இந்நூல் ஏற்படுத்துகிறது.

**...வாசிப்போம்.**

இந்த நூலைப் படிக்க QR CODE-ஐ ஸ்கேன் செய்யவும்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

**732**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131